**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No: STC.974/2024**
**Prosecution Witnesses : 1**

| | | | |
|---|---|---|---|
| Name | : **சிவசங்கரி** | Caste | : |
| Father Name/ Husband Name | : **ராஜாங்கம்** | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(எதிரி ஆஜர். எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்)
**(20.08.2025)**
**முதல் விசாரணை**

நான் தற்போது தொழிலாளர் உதவி ஆய்வாளராக பணி மாறுதல் பெற்று பணி செய்து வருகிறேன். சம்பவ சமயத்தில் மதுரை உசிலம்பட்டி தொழிலாளர் உதவி ஆய்வாளராக பணி செய்து வந்தேன். கடந்த 13.09.2023 அன்று பிற்பகல் 12.30 மணிக்கு செங்குளம் சோழவந்தான் சாலை திருமங்கலம் என்ற முகவரியில் உள்ள கர்ணன் இருசக்கர வாகன பழுதுபார்பக்கத்தில் செல்வன். முருகன் வயது 17/23 த/பெ.முத்துக்குமார் கண்டுகுளம் பகுதியை சேர்ந்த 18 வயது பூர்த்தியடையாத வளர் இளம் பருவத்தினர் அந்த கடையில் உதவியாளராக பணியில் இருந்தார் என்ற விபரம் எனது மேற்கண்ட தேதியில் நேரடி ஆய்வில் தெரியவந்தது. எனவே மேற்படி சிறுவன் முருகனிடம் விசாரணை செய்து எனவே அவரை பணிக்கு அமர்த்திய ஆஜர் எதிரி சதீஸ்குமாரை விசாரணை செய்தேன். எனது விசாரணையில் மேற்படி முருகன் என்பவர் 3 நாட்கள் மேற்படி கடையில் வேலை செய்ததாக தெரியவந்தது. மேற்படி செல்வன்.முருகன் அங்கு வேலை செய்தததை ஆஜர் எதிரி சதீஸ்குமாரிடம் விசாரணை செய்து உறுதி செய்து கொண்டோம். நான் விசாரித்த போதுமேற்படி செல்வன். முருகன் கை, கால்களில் கிரீஸ் கறையுடனும், அவரது ஆடையும் கிரீஸ் கறையுடனும்

காணப்பட்டது. பின்பு நான் எனது அலுவலகம் சென்று வளர் இளம் பருவ வயதினரான செல்வன். முருகனை வேலைக்கு அமர்த்தியது தொடர்பாக ஆஜர் எதிரி சதீஸ்குமாரிடம் விளக்கம் கேட்டு 04.10.2023 அன்று அறிவிப்பு ஒன்றை அனுப்பினேன். **அந்த அறிவிப்பு ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அதற்கு ஆஜர் எதிரி எந்த பதிலும் தரவில்லை. நாங்கள் ஆய்வு செய்ததிலிருந்து நீதிமன்றத்தில் ஒரு வருடத்திற்குள் வழக்கு பதிவு செய்யவேண்டும். அந்த ஒரு வருட காலம் முழுவதும் நான் ஆஜர் எதிரியை தொலைபேசி மூலமாகவும், ஒரு தடவை நேரிலும் சென்று மாவட்ட மேஜிஸ்ட்ரேட் அவர்களிடம் இணக்க கட்டணம் கட்டி வழக்கை முடித்துக்கொள்ள கேட்ட போது அவர் சம்மதிக்கவில்லை. 06.02.2024 அன்று ஆஜர் எதிரி பதில் கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தார். அந்த கடிதத்துடன் **செல்வன்.முருகனது அடையாள அட்டை நகல் மற்றும் அஞ்சல் கவரும் ரசீதுடன் சேர்த்து ம.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. (எதிரி தரப்பில் ஆட்சேபனையுடன் மேற்படி கடிதம் குறியீடு செய்யப்படுகிறது).** அந்த கடிதத்தில் செல்வன். முருகன் என்பவர் செக்கானூரணி அரசு தொழிற்கல்வியில் சேர்ந்து படிப்பதாக குறிப்பிடப்பட்டு இருந்தது. மேற்படி நபர் செக்கானூரணி தொழிற் கல்வியில் படிப்பது சம்பந்தமாக விசாரித்த போது 3 மாதங்கள் வரை மட்டுமே மேற்படி நிறுவனத்தில் படித்ததாக அவர்கள் கூறினார்கள். (**மேற்படி ஆவணங்களை தாக்கல் செய்வதற்காக முதல் விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)**